1994 நவம்பர் 4]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், அவர்கள் முன் அனுமதி இல்லாமல் பேசிய காரணத்தால் நீங்கள் இங்கே அனுமதிக்கவில்லை. அரசாங்கத்திடம் அனைவற்றுக்கும் தெளிவான பதில் இருக்கிறது. அதை உரிய நேரத்தில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறபோது அதைப்பற்றி நீங்கள் பொருட்படுத்த வேண்டியதே இல்லை.

5. அறிக்கைகள் அளித்தல்

பொதுநிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இராம. இராமநாதன், பொது நிறுவனங்களின் குழுவின் தலைவர்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புமிக்க இந்த தமிழக சட்டமன்றப் பேரவையில் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவராக அறிக்கைகளை அளித்திட எனக்கு நல் வாய்ப்பு அளித்தட்ட தமிழகத்தின் நிரந்தர முதல்வர் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். 1994-95-ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக கீழ்க்காணும் இரண்டு அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன் :

(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1985-86-ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (வணிகம்) கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு 1992-93-ஆம் ஆண்டு அளித்த 91-ஆவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது இந்த அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் 220-ஆவது அறிக்கை.

[திரு. இராம. இராமநாதன்] [1994 நவம்பர் 4

(2) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986–87-ஆம் ஆண்டுக்கான அறிக்கையில், (வணிகம்) தொழில் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு 1992–93-ஆம் ஆண்டு அளித்த 134-ஆவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் 221-ஆவது அறிக்கை.

இவை இரண்டையும் இங்கே மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி சமர்ப்பிக்கின்றேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.